

குளித்தலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி, துணைவியார் நல்லம்மாள் சிலை திறப்பு விழா பணிக்கம்பட்டியில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, குளித்தலை எம்.எல்.ஏ சூரியனூர் சந்திரன், வக்கீல் பாலன், முன்னாள் அமைச்சர் நல்லுசாமி, திருச்சி மேயர் அன்பழகன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே என் நேரு அவர்கள் வியட்நாமில் உயிர் இழந்த அழகு ராஜன், ஷேக் அப்துல்லா, பாலாஜி ஆகிய மூவரின் இல்லங்களுக்கு நேரில் சென்று மலர அஞ்சலி செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார் உடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், கிராப்பட்டி செல்வம் உட்பட பலர் உடன் இருந்தனர்



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே என் நேரு அவர்கள் தலைமையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவ சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள் அருகில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் முன்னாள் எம்எல்ஏ ஸ்டாலின் குமார் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன் பொருளாளர்கள் தர்மன் ராஜேந்திரன் துரைராஜ் துரைராஜ் கருணை ராஜா டோல்கேட் சுப்பிரமணி மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, தொமுச மாவட்ட அமைப்பாளர் குணசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் மோகன்தாஸ் பாலசுப்பிரமணியன், கிராப்பட்டி செல்வம் கமால் முஸ்தபா ராமதாஸ் , சோழன் சம்பத் முத்து செல்வம் கலைச்செல்வி ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை வீரமணி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

### சேலம் கெங்கவல்லியில் கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்க!

# த.வெ.க. ஆட்சியில் அம்பேத்கர் சிலையை பாதுகாக்க முடியவில்லை!

## இந்திய குடியரசுக் கட்சித் தலைவர் டாக்டர் செ.கு. தமிரசன் அறிக்கை !



சேலம், ஜூலை 16-

இந்திய குடியரசு கட்சியின் தலைவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான முனைவர் செ.கு. தமிழரசன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

சேலம் மாவட்டம் கெங்கவல்லி கூட்டுப்பாதையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பாபா சாகேப் அம்தேகருடைய முழு உருவச் சிலையை நிறுவ அந்த பகுதி மக்கள் முயன்றனர். அதற்கு முன்பாகவே அந்த பகுதியில் கட்சிகளின் கொடிக் கம்பங்கள், பெருந்தலைவர் காமராஜர் சிலை, நிறுவப் பட்டுள்ளன. அவற்றின் அருகே பாபாசாகேப் அம்பேத்கர் சிலையையும் நிறுவ ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் முயன்றனர்.

கால் மேல் கால் போட்டு அமர்ந்த பொலிவோடு இந்த சிலை அமைந்திருந்தது. அந்த பகுதி மக்கள் எதிர்த்தனர். கலவரத்தில் ஈடுபட்டுச் சமூக மோதலை உருவாக்க முனைந்தனர். இதனல் சிலையைச் சுற்றிலும் தகரங்கள் அடிக்கப்பட்டு மூடப்பட்டது

இடைவெளிக்குப் பிறகு சில நாட்களுக்கு முன் உள்ளூர் திருவிழாவையொட்டி சில பேனர்கள் அந்த தகரத்தின் மீது வைக்கப்பட்டன. இவை அவிழ்க்கப்பட்ட போது, தகரமும் பிரிந்ததா? அந்த பேனர்கள் எடுக்கப்பட்ட நிலையில் வேறுசிலர் அந்த தகரத்தை எடுத்தார்களா என்பது விசாரணைக் குரியது.

மக்கள் கண்களில் சிலை தென்படும் நிலையில், "உடனே அந்த சிலையை எடுதததுவிட வேண்டும்" என்று வழக்கம் போல ஆதிக்கச் சக்திகள் கொதித்தன.

"சிலையை அகற்றக்கூடாது" என்று அம்பேத்கரிய ஆர்வலர்கள் தடுத்தனர். இதனையொட்டி கலவரம் மூண்ட பிறகு, காவல்துறை தலையிட்டு, வழக்கம் போல சிலையை மூடி விட்டது. ஒடுக்கப்பட்ட மக்களிலிருந்து 15 பேரை போலிசார் கைது செய்து இருக்கிறார்கள். அதில் பல்வேறு வழக்குகளை போட்டிருக்கின்றனர்.

இது வன்மையாகக் கண்டிக்கதக்கது சமூகத் தீர்வு மேற்கொள்வதற்கு புதிதாக அமைந்திருக்கிற அரசு முற்படாமல், அந்தப் பகுதியில் மேலும் கலவரம் கிளம்பும் நடவடிக்கையாக 15க்கும் மேற்பட்ட தலித்துகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயரில் கடுமையான பிரிவுகளில் வழக்கு போட்டிருப்பது மிக மிக வருத்தத்துடன் கண்டிக்க தக்கது. இந்த போக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்த ஆட்சி அமைத்து இரண்டு மாத காலத்திலேயே, இந்த தொடக்கம் தமிழகத்தின் சமூக நல்லிணக்கத்துக்கு சமூக சமுத்துவத்திற்கும் எதிரான நடவடிக்கையாக இருக்கிறது. தமிழக வாழ்வுரிமைக் கட்சியைச் சேர்ந்த பொறுப்பில் இருக்கிற ஒருவர் கூட இதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தம்முடைய தமிழக வெற்றிக்கழக கட்சியின் கொள்கைத் தலைவர்களில் ஒருவராக பாபா சாஹேப் அம்பேத்கரை நம்முடைய தமிழக முதலமைச்சர் விஜய் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவருக்கு இந்த தகவல் தெரிவிக்கப்படவில்லையா இந்த செய்தி அவரக்குப் போய்ச் சேரவிலையா இந்த செய்தியை அவர் அறியாதவராக இருக்கிறார். ஏன் இதில் வழக்கம் போல மவுனம் காட்டுகிறார். அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் அடித்தட்டு கருப்பர் இன மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்தார். அந்த மக்களின் ஏகோபித்த தலைவரான ஆபிரகாம் லிங்கனுக்கு வாஷிங்டனில் அமைந்திருக்கிற லிங்கன் நகரில் அவர் கால் மீது கால் போட்டு அமர்ந்திருப்பதை போல ஒரு கம்பீரமான சிலை உண்டு.

இன்றைய முதலமைச்சர் விஜய் அவர்கள் கட்டாயம் பார்த்திருக்கக் கூடும்.

அவர் அரசியல் ரீதியாக அறியாவிட்டாலும் அவர் சுற்றுப் பயணமாக போன போது பார்த்திருக்க முடியும். தமிழ்நாட்டில் அம்பேத்கர் நகர் இல்லாத ஒரு நகரமே இன்றைக்கு கிடையாது .

இவை எல்லாம் மக்கள் உணர்வுகளாலேயே மக்களின் முனைப்பினாலேயே உருவானவை. அம்பேத்கரின் ஒரு சிலையைக் கூட பாதுகாப்பதற்கு முடியவில்லை என்பது வேதனையாக இருக்கிறது

இது நியாயம்தானா?

முதலமைச்சர் விஜய் அவர்கள் உடனடியாக இதில் தலையீடு செய்ய வேண்டும். கைது செய்யப்பட்டு இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் அனைத்து வழக்குகளில் இருந்தும் விடுவித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும். பாபாசாகேப் அம்பத்தகர் சிலையை நகரச் சிறையிலிருந்து மீட்டெடுத்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். சாதிய மோதல்களுக்கு முடிவுகட்ட முதல்வர் விஜய் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் பரம்பூர் சீகம்பட்டியில் விபத்துக்குள்ளாகி புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்தவர்களை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன் பார்வையிட்டு, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் எம். கோவிந்தராஜ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.ஜி .ஆர். மணிவண்ணன், எஸ்,வி .ஆர். ஸ்டாலின், சிங்கமுத்து, என். ஜாபர். காடை கார்த்திக் உள்ளிட்ட கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.

# தூத்துக்குடி - போல்பேட்டை பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் சிறப்புரையாற்றினார்!




தூத்துக்குடி, ஜூலை 15 -

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போல்பேட்டை பகுதி திமுக செயல்வீரர்கள் கூட்டம் 13.07.2026 அன்று மாலை 6 மணி அளவில் கலைஞர் அரங்கில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு போல் பேட்டை பகுதி செயலாளர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர் ஆனந்தசேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ் மோகன் செல்வின், மாநகர அவைத்தலைவர் ஏசுதாசன் , மாநகர துணை செயலாளர் கீதா முருகேசன், பிரமிளா, சி.எஸ்.முரளிதரன், மாவட்ட அணி அமைப்பாளர் கவிதா , மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு 75 ஆண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். தமிழ்நாட்டை திமுக ஆட்சியின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியதும், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டைமுன்னேற்றியதும் தி.மு.க. அரசு என்பதை யாராலும் மறுக்க இயலாது.

இன்றைய நவீன தமிழ்நாட்டை உருவாக்கியதும் தி.மு.க. அரசு தான். பொருளாதாரத்தில் இரட்டை இலக்க வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி என ஒட்டு மொத்த தமிழ்நாட்டையும் வளர்ச்சியை நோக்கி முன்னெடுத்து அழைத்து சென்ற தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை பற்றியும் திராவிட முன்னேற்ற கழகத்தை பற்றியும்

மனித மாண்பை மீறி கரூர் பொதுக்கூட்டத்தில் அநாகரிகமாக பொய் செய்திகளை பேசிய தவெக அரசின் முதல்வர் விஜய்யை கண்டித்தும், கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து காமராஜருக்கு பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

காங்கிரஸ் கட்சி கைவிட்ட கர்மவீரர் காமராஜர் மறைந்தபோது அவருக்கு உரிய அரசு மரியாதையை அளித்து அவரை நல்லடக்கம் செய்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கன்னியாகுமரியில் மணி மண்டபம் அமைத்து அவருக்கு பெருமை சேர்த்தது தி.மு. க.ழக அரசு. சென்னை மெரீனா சாலைக்கு காமராஜர் சாலை என்று பெயர் சூட்டியது தி.மு.கழக அரசு.

சென்னை உள்நாட்டு விமானநிலையத்துக்கு காமராஜரின் பெயர் சூட்டி அழகு பார்த்தது தி.மு.கழக அரசு.

அந்த எளிமையின் சிகரம் காமராஜருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஜூலை 15ம் தேதி அவரது 124வது பிறந்த நாளை போல்பேட்டை பகுதி கழகம் சார்பில் சிறப்பாக இனிப்புகள் வழங்கி கொண்டாடுவது என்றும் தி.மு.க.வின் கொள்கைகளான சமூக நீதி, சமத்துவம், அனைவருக்கும் சம வாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகிய கொள்கைகளை பற்றியும், அந்த கொள்கைகளினால் தமிழ்நாட்டில் தமிழ்மக்களின் வாழ்வாதாரத்தில், தமிழ் மொழி வளர்ச்சியில் ஏற்படுத்திய முன்னேற்றத்தை பற்றியும் மக்களிடம் எடுத்து சொல்லுவோம். கழக செயல்வீரர்கள் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து திமுக தலைவரின் வழியில் கட்சியின் வளர்ச்சிக்கு பணியாற்றுவோம் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





கழக சட்டதிட்ட திருத்தக்குழு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா, பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியில் உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் குட்டி (எ) ஆ.சுதாகர் (வால்பாறை), கே.நித்தியானந்தன் (பொள்ளாச்சி), கழக இலக்கிய அணி செயலாளர் ஈரோடு இறைவன், கழக ஆதிதிராவிடர் நலக்குழு இணைசெயலாளர்திப்பம்பட்டி.வே.ஆறுச்சாமி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.